புன்செய் புளியம்பட்டி நகராட்சி 25.06.2018–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்

பொருள் : 1

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் K.Dis.ந.க.எண்.4861/P3/2018 நாள்.22.02.2018ம் தேதிய உத்திவின்படி, இந்நகராட்சியில் 1 முதல் 6 வார்டுகளில் தனியார் மூலம் 41 பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, மேற்படி பணிக்காக 18.05.2018 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 4.00 மணிக்கு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு பரிசீலனை செய்து தேர்ந்தெடுக்கப்பட்டது.

1. S.S.Engineers , 3/6,காமதேனு நகர், வடவள்ளி, கோயமுத்தூர்
   Online Tender
2. S.S.Engineers, 3/6,காமதேனு நகர், வடவள்ளி, கோயமுத்தூர்
3. VBN Builderrs, திருப்பூர்
4. V.ஜெயராஜ், 71 G3, GKM Layout, சிவானந்தபுரம், சாவணம்பட்டி, கோயமுத்தூர்

மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளின், விலைப்புள்ளிகளை ( Price Bid ) 21.06.2018ம் தேதி திறக்கப்பட்டு, மேற்படி 4 நிறுவனங்களால் வழங்கப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தனிஅலுவரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளி விவரம் | அரசாணை எண்.62, தொ (மற்றும்) வே.வா.துறை . நாள்.11.10.2017ன் படி தினக்கூலி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ( ரூ) | வரிகள் உட்பட EPF , ESI and GIS நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ( ரூ) | மொத்தம் ( ரூ) | மதிப்பீட்டை விட அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 6 வரை வார்டுகளில் 41 பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகளை ( திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் கையாளுதல் விதிகள் 2016ன்படி) தரம் பிரித்து வாங்குதல், தெருக்களை கூட்டி சுத்தம் செய்தல், வடிகால் தூர் வாரி சுத்தம் செய்தல் மற்றும் | S.S.Engineers , 3/6,காமதேனு நகர், வடவள்ளி, கோயமுத்தூர் **(Online Tender)** | 163155.00 | - | 6689355.00 | 9.60 % குறைவு |
| 2 | | S.S.Engineers, 3/6,காமதேனு நகர், வடவள்ளி, கோயமுத்தூர் | 163155.00 | - | 6689355.00 | 9.60 % குறைவு |
| 3 | | VBN Builderrs, திருப்பூர் | 346.48 | 62.01 | 408.49 | 10.00 % குறைவு |
| 4 | | V.ஜெயராஜ், 71, G3, GKM Layout, சிவானந்தபுரம், சாவணம்பட்டி, கோயமுத்தூர் | 346.50 | 62.02 | 408.52 | 10.00 % குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சேகரித்த குப்பைகளை நகராட்சி தெரிவிக்கப்படும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் ஆகிய பணிகள், பணி ஒப்படைக்கும் காலம் முதல் ஓராண்டுக்கு பணி செய்தல். | | | | | |

அலுவலக குறிப்பு :

அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 11.10.2017ன்படி துப்புரவு பணியாளருக்கு ஒரு நபருக்கு ஒரு நாள் தினக்கூலி ரூ.385/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி தினகூலி அடிப்படையின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். K.Dis.4861/P3/2018 நாள்.22.02.2018–ல் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் ஒரு நபருக்கான தினகூலி தொகை ரூ.385/– ல் 10% குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள 1. VBN Builderrs, திருப்பூர் மற்றும் 2. V.ஜெயராஜ், கோயமுத்தூர் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒன்றை தேர்வு செய்யலாம்.

(ந.க.எண்.25/2016/அ1)

**தீர்மான எண் :** 830

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள M/S VBN Builders, திருப்பூர் என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் அந்நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டது.

(ஒப்பம்) என். தட்சிணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.06.2018–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் அமைந்துள்ள பவானிசாகர் அணையிலிருந்து நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதான பகிர்மான குழாய்கள் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலை வழியே அமைந்துள்ளது. நெடுஞ்சாலை துறையினரால் சாலையை அகலப்படுத்த முன்னேற்பாட்டு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

பவானிசாகர் பிரதான நெடுஞ்சாலையில், தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அண்ணா நகர் நீருந்து நிலையம் வழியாக புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி வரையிலும் மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை தொட்டிகள் வரையிலும், குடிநீர் விநியோக பிரதான பகிர்மான குழாய்கள் மற்றும் குடிநீர் உந்து குழாய்கள் (Pumping Main) அமைக்கப்பட்டுள்ளன.

பவானிசாகர் சாலையை நெடுஞ்சாலை துறை அகலப்படுத்தும் போது, மேற்படி பிரதான குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் குடிநீர் உந்து குழாய்கள் சாலையின் மத்திய பகுதியில் அமையும் நிலையுள்ளது. மேற்படி நெடுஞ்சாலையானது பண்ணாரி அம்மன் கோவில் மற்றும் மைசூர் செல்லும் பிரதான சாலையாக நகரின் மத்தியில் அமைந்துள்ளது.

எனவே, மேற்படி சாலையில், கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் நிலையில் தற்சமயம் நான்கு வழி சாலையாக அகலப்படுத்தும் போது சாலையின் மத்தியில் அமைந்துள்ள குடிநீர் உந்து குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் பழுது, உடைப்பு மற்றும் கசிவு ஏற்படும் நிலையில் உடனுக்குடன் பழுது சரிசெய்ய இயலாத நிலை ஏற்படும் வாய்ப்புள்ளது. இதனால் நகரில் குடிநீர் பிரச்சனைகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

தலைமை நீரேற்று நிலையம் நகரிலிருந்து 17கி.மீ. தொலைவிலிருந்து குடிநீர் உந்தப்படுவதாலும், உந்து குழாய்கள் சாலை வழி பகுதியில் வருவதாலும், கால்வாயை, கடந்து வருவதாலும் மண்ணின் தன்மைக்கு ஏற்றார் போல் விரிவடைந்தும் சுருங்கியும் நிலத்தின் தன்மை மாறுபடுவதால் 1972 மற்றும் 2002ல் அமைக்கப்பட்ட குடிநீர் உந்து குழாய்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் கோடை காலங்களில், குடிநீர் விநியோகம் பாதிப்படைந்து வருகிறது.

ஆகவே, சாலையின் குறுக்காக குடிநீர் உந்து குழாய், மற்றும் குடிநீர் விநியோக குழாய் செல்லாதவாறு நெடுஞ்சாலை துறையின் நான்கு வழி சாலை அகலப்படுத்தும் பகுதியில்

சாலையின் வலதுபுறம் குடிநீர் விநியோக குழாய், (Distribution main) தனித்தனியே புதியதாக பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட வேண்டும். குடிநீர் விநியோக மேம்பாடு செய்யும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) கலந்தாலோசகர் மூலம் தயார் செய்து பெறப்பட்ட ரூ.**14.80** கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கையினை முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.**7567 / 2015** / குவ**1**, நாள்.**11.03.2015** மூலம் நிதி ஆதாரம் பெற மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

மேலும், இந்த திட்ட அறிக்கை குறித்து **09.09.2016** நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி திட்ட அறிக்கையில் சில மாற்றங்கள் செய்து ஏற்கனவே, குடிநீர் விநியோகத்தில் மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையையும் ஒருங்கிணைத்து திருத்திய திட்ட அறிக்கை அளித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒருங்கிணைந்த திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை ஏற்கனவே, குடிநீர் விநியோகத்திற்கான மேம்பாடு செய்திட திட்ட அறிக்கை தயாரித்து அளித்துள்ள TWIC கலந்தாலோசகர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று செயல்படுத்திடவும், இதற்கான உத்தேச செலவினம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட TWIC நிறுவனத்தாரரின் கடிதம் TWIC/Proposal/Punjaipuliampatti/DPR-WS/2018-19, நாள்.**26.06.2018**–ல் தெரிவித்தவாறு ரூ.**15.00** இலட்சம் மற்றும் சேவை வரியினையும் சேர்த்து நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 831
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.06.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 2

வீடு மற்றும் வீட்டு உபயோகமற்ற குடிநீர் இணைப்புகளுக்கு 1.10.2018 முதல் குடிநீர் கட்டண உயர்வு பற்றிய திருத்தப்பட்ட 1920 ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 310 (2) ன் கீழ் விளம்பரப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வீட்டுக்குழாய் மற்றும் வீட்டு உபயோகமற்ற குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் கட்டண உயர்வு வரைவு உபவிதிகள்.**

1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 310 (2) ன்படி துணை விதிகள் பாகம் –1, துணைவிதி எண். 3 (ஆ)–ல் கீழ்க்கண்ட திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

1. **குடிநீர் கட்டணங்கள்**

| குடிநீர் கட்டணங்கள் உபயோகம் | தற்போது வசூல் செய்யப்படும் குடிநீர் கட்டணங்கள் | 01.10.2018 முதல் உயர்வு செய்யப்படும் குடிநீர் கட்டணங்கள் | 01.10.2018 முதல் வசூலிக்க உள்ள அளவுமானி கட்டணம் மற்றும் குடிநீர் மேல்வரி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| வீட்டு உபயோகம் குடிநீர் இணைப்புகள் | மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் (ஒவ்வொரு1000 லிட்டருக்கு ரூ.10/– ) (அளவு மானி வாடகை மற்றும் பராமரிப்புக் கட்டணம் நீங்கலாக) (ரூ. 100+1) | மாதம் ஒன்றுக்கு ரூ.150/– (ஒவ்வொரு1000 லிட்டருக்கு ரூ.15/–) | ரூ.5/– மற்றும் ரூ.5/– |
| தொழில் உபயோகம் குடிநீர் இணைப்புகள் | மாதம் ஒன்றுக்கு ரூ.240/– வீதம் (ஒவ்வொரு1000 லிட்டருக்கு ரூ.24/–) ம். (அளவு மானி வாடகை மற்றும் பராமரிப்புக் கட்டணம் நீங்கலாக) ( ரூ. 240+1) | மாதம் ஒன்றுக்கு ரூ.300/– (ஒவ்வொரு1000 லிட்டருக்கு ரூ.30/–) | ரூ.5/– மற்றும் ரூ.5/– |
| வியாபார உபயோகம் குடிநீர் இணைப்புகள் | மாதம் ஒன்றுக்கு ரூ.240/– வீதம் (ஒவ்வொரு1000 லிட்டருக்கு ரூ.24/–) ம். (அளவு மானி வாடகை மற்றும் பராமரிப்புக் கட்டணம் நீங்கலாக) ( ரூ. 240+1) | மாதம் ஒன்றுக்கு ரூ.300/– (ஒவ்வொரு1000 லிட்டருக்கு ரூ.30/–) | ரூ.5/– மற்றும் ரூ.5/– |

## 2. குடிநீர் லாரி கட்டணம்

| வ.எண் | தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் 1 லாரி குடிநீர் கட்டணம் (1) | 01.10.2018 முதல் உயர்வு செய்யப்படும் 1 லாரி குடிநீர் கட்டணம் (வாகன வாடகை நீங்கலாக) (2) |
|---|---|---|
| அ). | ஏதுமில்லை | ரூ.500/– |
| ஆ). | ஏதுமில்லை | 1 சிறியலாரி குடிநீர் கட்டணம் (வாகன வாடகை நீங்கலாக) ரூ.250/– |

01.10.2018 முதல் குடிநீர் கட்டணம் உயர்வு செய்யவும், அதனை மாவட்ட அளவிலான நாளிதழில் விளம்பரப்படுத்தவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. குடிநீர் விநியோகத்திற்காக செலுத்தப்படும் மின் கட்டணம், குடிநீர் கட்டண கேட்புத் தொகையினை விடவும் அதிகமாக உள்ளது. மேலும், குடிநீர் குழாய் பராமரிப்பிற்கான செலவினங்களை எதிர்கொள்ள போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும், 01.10.2013 குடிநீர் கட்டணம் உயர்வு செய்து ஐந்து வருடங்கள் 30.09.2018 ல் நிறைவடைவதாலும் மேற்கூறியவாறு கட்டணங்களை 01.10.2018 முதல் உயர்வு செய்ய அனுமதிக்கலாம்.

2. மாவட்ட அளவிலான நாளிதழில் விளம்பரபடுத்தவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்.

(ந. க. எண்.487/2018/இ1)

**தீர்மான எண் : 832**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.06.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 3

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன் 2018 மாதத்திய நாட்குறிப்பு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** தனி அலுவலர் பார்வையிடலாம்.

(ந. க. எண். 195/2017/அ1)

**தீர்மான எண் :** 833
**தீர்மானம் : ஆணையாளர் அவர்களின் ஜீன் 2018 மாத நாட்குறிப்பு தனி அலுவலரால் பார்வையிடப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.06.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 4

இந்நகராட்சியின் 2016–2017–ம் ஆண்டுக் கணக்குகள் தயார் செய்து கணக்கு விபரங்களை DATA ENTRY செய்து முடித்து தணிக்கைக்கு சமர்ப்பிக்க திருமதி. எஸ். தாமரைச்செல்வி, சன் டாடா காம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான ஏற்படும் செலவுச் தொகை ரூ. 45,000/– வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(318/2015/பி2)

**தீர்மான எண் :** 834
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.06.2018—ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த கீழ்க்காணும் சாலைகளை சீரமைக்கும் பணியினை தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2018-2019)-ன் கீழ் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சத்திற்கு முன்மொழிவு தயார் செய்யப்பட்டு, இந்நகரமன்ற தீர்மான எண்.815, நாள்.14.05.2018ன் படி அனுப்பப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.27.06.2018ன் படி,

| வ.எண் | விபரம் | மதிப்பீடு ரூ கோடியில் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம்-III | 0.38 |
| 2 | மத்திய நிதிக்குழு மானிய நிதி | 0.30 |
| 3 | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | 0.22 |
| 4 | நகராட்சியின் பங்களிப்பு (ULB) | 0.10 |
| | **மொத்தம்** | **1.00** |

மேற்கூறிய நிதி ஒதுகீட்டில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பணியின் விபரம்:—**

| வ.எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | எஸ்.ஆர்.டி பின்புறம் வீதிகள் 7 மற்றும் 8, தில்லை நகர், நகராட்சி அலுவலக வளாகம், மாதம்பாளையம் ரோடு மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி அருகில், வாரச்சந்தை மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி அருகில், ஜவகர் தெரு (மேட்டுப்பாளையம் ரோடு குறுக்கு தெரு), ஜவகர் இணை வீதி (கோவை ரோடு குறுக்கு தெரு) ஆகிய பகுதிகளில் புதிதாக தார்சாலைகள் அமைத்தல் | 1.44 | 100.00 |

அலுவலகக் குறிப்பு:–

நகர மன்ற தீர்மான எண். 815, நாள்.14.05.2018– ன் படி அனுப்பப்பட்ட பிரேரணைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.27.06.2018ன் படி,

| வ.எண் | விபரம் | மதிப்பீடு ரூ கோடியில் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம்-III | 0.38 |
| 2 | மத்திய நிதிக்குழு மானிய நிதி | 0.30 |
| 3 | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | 0.22 |
| 4 | நகராட்சியின் பங்களிப்பு (ULB) | 0.10 |
| | **மொத்தம்** | **1.00** |

மேற்கூறிய நிதி ஒதுகீட்டின்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 835
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.06.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 6

**இந்நகராட்சியின் குடிநீர் பிரிவில் அடியிற்கண்ட பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15ன் படி செய்து முடிக்கப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.**

| வ. எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 1. | 543/2018/இ1 | பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 60HP மின்மோட்டார் பழுது, 150mm குழாய் உடைப்பு மற்றும் NRV பழுது ஆகியவற்றை சரி செய்து 600A Fuse carrier – கள் புதிதாக பொருத்துதல் சார்பாக. | ரூ.96,500/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| 2. | 644/2018/இ1 | வார்டு எண்.10 தில்லை நகர், ஸ்ரீ தேவி தியேட்டர் சந்து அருகில் பகிர்மான குழாய், ஜெ.ஜெ நகர் செல்லும் பிரதான குழாய், காந்தி நகர் அண்ணாச்சி கடை அருகில் பகிர்மான குழாய் உடைப்பு சரி செய்தல். | ரூ.12,000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| 3. | 639/2018/இ1 | வார்டு எண்.12 தோட்டசாலை செல்லும் பிரதான குழாய், வார்டு எண்.15 காயிதே மில்லத் தெரு நகராட்சி மண்டபம் அருகில், வார்டு எண்.14 ஜெ.ஜெ நகர் சந்தை ரோடு பிரிவு மற்றும் பொது கழிப்பிடம் அருகில் பைப் லைன் சரி செய்தல். | ரூ.26,000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| 4. | 640/2018/இ1 | சந்தை OHT அருகில் 200 mm A/c பைப், காயிதே மில்லத் தெரு State Bank பின்புறம், டானா புதூர், உதயம் ஹோட்டல் சந்து 9,12,13 செல்லும் பகிர்மான குழாய் உடைப்பு சரி செய்தல். | ரூ.28,000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| | | வார்டு எண்.13,14 செல்லும் பிரதான குழாய் 5” PVC பைப் சந்தை முன்புறம், | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | 631/2018/இ1 | சுங்கம் கேட் அருகில், கணபதி ஸ்வீட்ஸ் அருகில், கே.ஜி மில் பின்புறம், அவினாசி ரோடு, ஊர் கவுண்டர் தெரு, பொரிக்காரர் தெரு அருகில் பைப் லைன் பழுது சரி செய்தல். | ரூ.34,000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| 6. | 642/2018/இ1 | குடிநீர் திட்டம் நிலை II ல் பவானிசாகர்– புன்செய்ப் புளியம்பட்டி சாலை அண்ணா நகர் மேடு 250 mm பைப் லைன் பழுது சரி செய்தல். | ரூ.23,000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |
| 7. | 643/2018/இ1 | குடிநீர் திட்டம் நிலை II ல் Filter Bed I-ன் 150 mm valve, compressor valve, 80mm valve , wash water section pipe, Foot valve | ரூ.14,000/– | ஸ்ரீ ஜெய் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், புன்செய்ப்புளியம்பட்டி |

**தீர்மான எண் :** 836
**தீர்மானம் :** **பட்டியல் காணும் பணிகள் பதிவு செய்யப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.